# துணிந்தவன் நாவலில் – தனிமனித வீம்பு

***முனைவர் ர. செல்வதா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
https://doi.org/10.5281/zenodo.15323761

***ஆய்வுச் சுருக்கம்***

*வாழ்வில் பலநிலைகளில், பல துறைகளில் சமூகத்தில் சிறுமைகளையும், சிதைவுகளையும், சீரழிவுகளையும் யதார்த்தமாக சித்தரிக்கும் நாவல் "துணிந்தவன்". எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்கள் எழுதிய இந்நாவலின் கதாநாயகன் மாதவன். நல்ல மனம் படைத்தவனாக நல்லவனாக வாழ்ந்து வறுமை நிலையில் சிறுமையடைகிறான். சமூகமும், சூழ்நிலைகளும் காலமும் இவனை ஆட்டிப்படைத்தன.அனைத்தின் மீதும் கசப்பு, வெறுப்பு கொள்கிறான். இந்நிலைகள் மாற வேண்டும் என்று விரும்புகின்றான். அது சாத்தியமாகாது என்று உணரும்போது தன் உணர்வுத்தூண்டலால் தானே மாறிக் கொள்கிறான். தன் வாழ்க்கையை வசதியாக்கத் திட்டமிட்டு துணிச்சலாகச் செயல்படுகிறான்.அவனது சிந்தனை,செயல்கள், அனுபவங்கள், அவனுடைய வாழ்க்கையை நமக்கு அடையாளப்படுத்துகிறது. இன்றைய மனிதர்களின் போக்குகள், நாட்டின் நிலைமை, அரசியல் தன்மையை அசைபோட வைக்கிறது இந்நாவல். சமூக மாறுதல் என்பது சாத்தியமல்ல. தனிமனிதன் தன்னை உணர்ந்து மாற்றிக் கொள்ள வேண்டும். அம்மாறுதல் வெற்றியா? தோல்வியா? என்பதை இக் கட்டுரை மூலம் அறிய முடிகிறது.*

***குறிப்புச் சொற்கள்:*** *மனக்குறளி, காக்காபிடித்தல், கம்பி இழுத்தும், முதுகைச் சொறிந்தும், காது குத்தியும், வியாக்கியானங்கள், திங்குதிங்கென்று அமரிக்கையாக போன்ற குறிப்புச் சொற்கள் நாவலில் விரவிக் கிடக்கின்றன.*

**முன்னுரை**

*1959ம் ஆண்டு சரஸ்வதி என்ற சிற்றிதழின் ஆண்டு மலரில் துணிந்தவன் நாவல் இடம்பெற்றது. இலக்கிய வாசகர்களின் பாராட்டைப் பெற்ற இந்நாவல் பின்பு தனிப்புத்தகமாக வெளிவந்தது. நாவல் உணர்த்தும் கருத்துக்கள், அவலநிலைகள் ஆண்டுகள் பல கடந்த பின்பும் சமூகத்தில் எந்நிலையில் உள்ளது என்பதை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. தனிமனித, சமூகநிலைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**கருதுகோள்**

*துணிந்தவன் நாவலின் கதாநாயகன் மாதவன். அவன் எதற்காகத் துணிந்தான், எந்த செயலில் துணிவு கொண்டான், அத்தகைய துணிவு சரியானதா? தவறானதா? அவனின் துணிவு வெற்றி பெற்றதா? அல்லது தோல்வியில் முடிந்ததா? என்று மாதவனின் துணிவை நோக்கியத் தேடலை இவ்வாய்வு கருதுகோளாகக் கொள்கிறது.*

**மாதவனின் மனக்குழப்பம்**

*மாதவன் எளிய வாழ்வு வாழ்ந்தவன். நேர்மை, உண்மை உடையவனாய், உழைப்பிலே உற்சாகம் கொண்டு வாழ்க்கை நடத்தினான். அவன் யாரையும் ஏமாற்றியதில்லை. ஆனால், அவனைப் பலர் ஏமாற்றினர். உருப்படத் தெரியாதவன், பைத்தியம் என்று மற்றவர்கள் பரிகசித்தனர். நேர்மை, நியாயம், உண்மை, மனித தர்மம் என்று பேசப்படுபவை எல்லாம் வெறும் பேச்சுக்கும்*

அலங்கார எழுத்துக்கும் எடுப்பாகத்தான் இருக்கின்றன. ஆயினும் அவை வாழ்விலே எவனையும் உருப்பட வைத்ததில்லை. ஆனால், தவறுகள் என்று கருத்தப்படுவனவற்றை எல்லாம் துணிந்து செய்கிறவர்கள் பாபங்கள் என்று போதிக்கப்படுபவற்றை விழிப்பு உணர்ச்சியோடு கையாள்கிறவர்கள்- சின்னத்தனங்கள் எனக் குறை கூறப்படுகின்றவைகளைக், கூசாது செயல் புரிவோர் பிரமாதமாக வாழமுடிகிறது இன்றைய சமுகத்திலே (துணி.நா.ப.3) என்று எண்ணினான் மாதவன். நல்ல பண்புடையவர்கள் இந்த சமுதாயத்தில் வாழமுடியவில்லை. தவறுகளை துணிந்து செய்கிறவர்கள் நன்றாக வாழமுடிகிறது. இதற்கான காரணம் என்ன என்று எண்ணிய மாதவன், கெட்ட போரிடும் உலகத்தை அதன் முறைகள் மூலமே புத்தி கற்பிப்போம் என்று துணிந்தான்.

**உண்பொழுது... தோல்வற்றிச் சாயினும்**
**சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்**
**தூஉயம் என்பார் தொழில்**[1]

உடல் இளைத்து அழிவதாய் இருந்தாலும், நற்குணங்களை ஆளுகின்ற தன்மையில் குறையாதிருத்தல் ஆகிய இம்மூன்றும் மன, மொழி, மெய்களால் தூய்மை உடையவர் என்று கருத்தப்படக்கூடியவர் செயல்களாம். நற்குணங்களை ஆளுகின்ற தன்மையில் குறைவில்லாமல் இருப்பவரே தூய்மையுடையவர் என்று திரிகடுகம் கூறுகிறது.

சமுதாயத்தை நோக்கும்போது பலரும் கூறக்கூடிய வார்த்தை ''நல்லவர்களுக்கு வாழ்வில்லை'' என்றும், தீமையின் உருவமாக வாழ்கிறவர்கள் நல்லாத்தானே இருக்கிறார்கள் என்றும் கூறுகின்றனர். இந்நிலையை எண்ணி மனம் நொந்து கொள்கிறார்கள். உலகியல் நிலையில் பார்க்கும்போது அவ்வாறு தோன்றினும், இறை நிலையில் அதற்கானத் தீர்வு சரியாகக் கொடுக்கப்படும் என்று வினைப்பயன் தன்மையை சான்றோர் நம்புகின்றனர்.

**மாதவனின் நிலை**

பதினாறு பதினேழு வயதில், இனிமையான எதிர்காலம் பற்றிய பசுமையான சித்திரங்களைத் தீட்டிய மாதவனின் மனம், முப்பத்திரண்டு வயதில் மாறுகின்ற நிலைமையை ஆசிரியர் கூறும்போது, வயது வளர வளர வருங்காலம் பற்றிய பசுமைகள் எல்லாம் நிகழ்காலத்தின் அனுபவ வெயிலிலே காய்ந்து கருகி தீய்ந்து போயின. நம்பிக்கை, வறட்சி அவனுள்ளத்தில் தலைதூக்கி வளர்ந்தது (துணி.நா.ப.2).

செய்தே ஆகவேண்டும் என்ற மனஉறுதி, இந்த உறுதிதான் ஒரு மனிதன் வெற்றி பெறுவதற்கான முதல் தேவை. இந்த குணம் இல்லாமல், வேறு எந்தத் திறமை இருந்தாலும் அவனால் வெற்றி என்னும் சிகரத்தைத் தொடமுடியாது[2]

நம்பிக்கை குறையும்போது மனஉறுதி தேவை என்பதை அறிய முடிகிறது.

**மாதவனின் நட்புவட்டம்**

மாதவன் தன் மாமா மகள் காந்திமதி பற்றி நினைத்தான். இருவரும் அன்புடன் பழகும் நிலையில், காந்திமதிக்கு வேறு ஒருவருடன் கல்யாணத்திற்கு நாள் குறித்ததைக் கேள்விப்பட்ட அவனின் மனம், குடும்பப் பெண்களில் அநேகருக்கு கன்னிப்பருவக் காதல் தோல்வியாக முடிந்த போதிலும், சம்பிரதாய ரீதியில் நடைபெறும் கல்யாணம் வாழ்வில் உறுதியும், நிச்சயமான ஒரு ஸ்தானமும் தகுதியும் பெற்றுத்தரும் நல்வாய்ப்பாகவே அமைகிறது (துணி.நா.ப.12) என்று எண்ணியது. நாட்கள் பல கடந்த நிலையில் காந்திமதியின் கடிதம் ஒன்றைப் படித்து அறியும்போது அதில் என் கணவரின் உள்ளத்தில் மகிழ்ச்சி இல்லை. அதனால் அவர் குடும்பத்தையும் நாசமாக்கிவிட்டார். அவருள் சந்தேகம் என்கிற விஷப்பூச்சி அரித்துக் கொண்டே இருக்கிறது. அதனால், அவர் என்னைக் கொல்லாமல் கொன்று சித்திரவதை செய்து வருகிறார் (துணி.நா. ப.94) என்று குறிப்பிட்டிருந்தாள்.

*அநேகருக்குக் கன்னிப் பருவ காதல் தோல்வியாக முடிகிறது. அதனால் சம்பிரதாயக் கல்யாணம் வாழ்விற்கு உறுதியைத் தரும் என்று நினத்தாலும், அதிலும் கணவன் மனைவி மீது கொள்ளும் சந்தேகம் அவன் மனதை அரித்து, வாழ்க்கையை அரித்துவிடுகிறது. இது சமுதாயத்தில் பெரும்பாலும் காணப்படும் நிலையாகும்.*

**வசந்தா**

*எப்பொழுதும் வேலையின் மீதும், பணம் பண்ணுவதிலுமே கருத்தாக இருந்தார். அதனால் அவர் மனைவி பொழுதுபோக்குக்கும், உல்லாசத்திற்கும் இளைஞர்களை நாடியதில் விசித்திரம் எதுவும்மில்லை (துணி.நா.ப.52). குழந்தைகள் பாலச்சந்திரன், பேபிக்கு பாடம் சொல்லித்தரும் உபாத்தியாயராய் மாதவன் போன இடத்தில் வசந்தாவை சந்திக்கிறான். வசந்தாவின் நட்பு ஏற்பட்டதிலிருந்து, மாதவன் வாழ்வில் பசுமை துளிர்விட ஆரம்பித்தது. அவள் குணாதிசயங்களை நினைத்துப் பார்த்தான். அவளுக்கு என்மீது பிரியம் ஏற்பட்டிருக்கிறது. நாளை இந்த அன்பு வற்றிப்போகலாம். வேறு ஒருவரை அவள் நாடலாம். அதைப்பற்றியெல்லாம் நான் வீணாக எண்ணி என் மனசை குழப்பிக் கொள்ள மாட்டேன். நிகழ்காலம் பசுமை அதுபோதும் என்று எண்ணினான். அன்றைய பொழுதை மகிழ்வுடன் நகர்த்தும் மனநிலையை மாதவன் பெற்றிருந்தான். ஒரு ஆண் வேலையின் மீதும், பணம் சம்பாதிப்பதிலும் கவனமாக இருந்து, குடும்பத்தைக் கவனிக்கவில்லை யென்றால் சில பெண்களின் மனநிலை மாற்றம் அடையும், தடுமாறுவார்கள் எனபதை வசந்தா வாழ்வின் மூலம் அறியமுடிகிறது.*

*உபாத்தியாயர் பணியிலிருந்து வெளியே வந்து, திக்கற்றுத் தெருவில் நிற்கும்போது தோழி வசந்தாதான், படாதிபதி பிறவிப் பெருமாளிடம் அழைத்துச் செல்கிறாள். அவர்மூலம் படத்தில் நடிக்கும் வாய்ப்பு பெற்று நடிகனாகிறான். அவள் செய்தி உதவி அவன்வாழ்வில் புகழ் ஏணியில் ஏறுவதற்கு அச்சாணியாக இருந்தது.*

***காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்***
***ஞாலத்தின் மாணப் பெரிது[3]***

*படாதிபதியை அறிமுகப்படுத்திய சிறிய உதவி, அந்த நேரத்தில் அவனுக்குப் பெரிதும் துணை செய்தது. தக்க சமயத்தில் செய்த நன்மை உலகை விட பெரியதாகும் என்ற குறள் கருத்து நிரூபணமாகிறது.*

***சோரா நல்நட்பு உதவியின் அறிப்[4]***

*நெகிழாத உயர்ந்த நட்பை, உதவி செய்யும் இயல்பினால் அறிவர் என்று முதுமொழிக் காஞ்சி கூறுகிறது.*

**ஜெவந்தி**

*முன்பு ஒருநாள், ஒரு பெண் தெருவில் நடந்து கொண்டிருந்த மாதவனை அலட்சியமாகப் பார்த்து கேலியாகச் சிரித்து கடந்து சென்றாள். அவள் முகமும் அந்தச் சிரிப்பொலியும் அவன் மனதை விட்டு நீங்கவில்லை. என்றாவது ஒருநாள் அவளை சந்திக்க முடியும் என்று நம்பினான். அவ்வாறே நடந்தது. ஆனால் சந்திப்பும் அறிமுகமும் வேறுவிதமாக இருந்தது. உங்களை இந்த நாட்டின் பச்சைக்குழந்தை கூட இனம்கண்டுகொள்ளும்.!அவ்வளவு புகழ் இருக்கிறது*

***உங்களுக்கு.***
***நீங்கள்தான் பெரிய ஸ்டார் ஆச்சுதே....***

***(துணி.நா.ப.81)***

*என்று அறிமுகமாகிறாள் ஜெவந்தி. பின்பு நட்பு தொடர்கிறது. எந்த அளவிற்கு என்றால் இன்ப விருந்தும், இன்சுவை விருந்தும் பெற்று மகிழ்ந்து தன்வீடு திரும்புவதற்கு தயாராகிறான் மாதவன். அவள் தனது விருப்பத்தை நிறைவேற்ற சாமர்த்தியமாக அவனைச் சிக்கவைத்து விட்டாள். இது அவளுடைய வெற்றியாயினும், மாதவனின் மனக்குறளி திருப்தி அடைகிறது. அலட்சியம், கேலிபேசும் ஜெவந்தி பின்னாளில், மாதவன் நடிகராகி புகழ்பெற்றதும், அவனிடம் நட்பு கொள்வது சமூகத்தில் சிலர் ஜெவந்தி போன்று நடந்துகொள்வதை வெளிப்படுத்துகிறது.*

**மாணவனுக்கு, மாதவனின் பயிற்சி**

*பத்திரிக்கை விளம்பரம் பார்த்து, பணக்காரர் பவானந்தம் மகனுக்கு கல்வி கற்பிக்கவும், அவனுக்கு துணைவராக உதவவும் மாதவன் செல்கிறான். மாதம் 50 ரூபாய் சம்பளம். தங்கும் இடம், உணவு இலவசம். பாலச்சந்திரனை அறிமுகம் செய்யும்போது, அடம் கொஞ்சம் ஜாஸ்தி, எதற்கெடுத்தாலும் அழுவான். அது பலவீனத்தாலும், பிறர் தன்னை புறக்கணிக்கிறார்கள் என்ற நினைப்பாலும் வந்த சுபாவமாக இருக்கலாம். நீர் கவனித்து அட்ஜஸ்ட் செய்து கொள்ளும் (துணி.நா.ப.24) என்று பெரியவர் மாதவனிடம் கூறுகிறார்.*

***ஒரு மாணவனை அடித்துத் திருத்தலாம் என்ற எண்ணத்தை விட அன்பாலும் திருத்தலாம் என்ற கொள்கையை வகுத்துச் செயல்பட வேண்டும்[5]***

*என்று நாஞ்சில் ஸ்ரீ விஷ்ணு கூறுகிறார்.*

*அடம்பிடிப்பது, எதற்கெடுத்தாலும் அழுவது குழந்தைகள் பெரும்பாலோரின் சுபாவம்தான். ஆனால், பாலச்சந்திரன் இந்த நிலைகளுடன் பிறர் தன்னைப் புறக்கணிக்கிறார்கள் என்று நினைக்கிறான். இது பெரும்பாலான குடும்பங்களில், குறிப்பாக பணக்கார வீட்டில் அதிகம் நடைபெறுகிறது. தாய், தந்தை தங்கள் வேலையை முதன்மையாகக் கொண்டு, வேலைக்குக் கொடுக்கும் நேரத்தை குழந்தைகளுக்குக் கொடுப்பதில்லை. இதனால், குழந்தைகள் மனம் பெற்றோரின் பாசம், அரவணைப்புக்கு ஏங்குகிறது. தங்களைப் புறக்கணிக்கிறார்கள் என்று நினைத்து அழுகையும், அடம்பிடிக்கும் தன்மையும் ஏற்படுகிறது. குழந்தைகளுக்கு நேரம் ஒதுக்க வேண்டும். அவர்களுடன் அன்பாகப் பேசி, விளையாடவேண்டும். அவர்கள் பேசும் வார்த்தைகளுக்கு செவிகொடுக்க வேண்டும். குழந்தைகளை நாம் கவனித்துக் கொள்கிறோம் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும்.*

*பொய் சொல்வது தனித்திறமை ஆகும். அதனால் கற்பனை வளரும். பொய்தான் கலைகளுக்கே ஜீவாதாரம் என்றும், அணில்களை மட்டும் அடிப்பதுடன் உன் வேட்டையை நிறுத்திவிட வேண்டாம். குருவிகளையும் குறிபார். கொல்ல முடிந்ததை எல்லாம் கொல்லு (துணி.நா.ப.33) என்றும் கூறுகிறான். இப்படிப் பயிற்சி பெற்றால், என்றைக்காவது ஒருநாள் நீ சிங்கம், புலி கூட கொல்லும் திறமையைப் பெற்றுவிடுவாய் என்று உற்சாகப்படுத்துகிறான். வாழ்க்கை நல்லவர்களை ஆதரிப்பது இல்லை, ஆகவே நல்லவனாக காலம் கழிப்பதற்கோ, நல்லவர்களைத் தயாரித்து விடுவதற்கோ அருகதை அற்றது இந்த வாழ்க்கை (துணி.நா.ப.34) என்று அவன் தனக்குத் தானே கூறிக் கொள்கிறான். மாதவனின் பயிற்சி வேறுவிதமாக அமைந்திருந்தது. அவன் அப்படிக்கூறக் காரணம், தன் வாழ்வில் அவன் கண்ட அனுபவத்தின் அடிப்படையில் மனம் வெறுத்து மாறாகக் கூறுகின்றான்.*

***எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்***
***பொய்யா விளக்கே விளக்கு[6]***

*பொய் சொல்லாமை அறியாமையை நீக்கும் விளக்காகும் என்று குறள் கூறுகின்றது.*

***ஒத்த ஒழுக்கம் கொலை பொய் புலால் களவொடு***
***தான் பிறந்த இல் நினைந்து தன்னைக் கடைபிடித்துத்***
***தான் பிறரால் கருதற் பாடுணர்ந்து - தான் பிறரால்***
***சாவ எனவாழான் சான்றோரால் பல்யாண்டும்***
***வாழ்க என வாழ்தல் நன்று[7]***

*தான் பிறந்த குடியை நினைத்து, தன்னை நல்லொழுக்கத்திலிருந்து சிறிதும் தவறாதபடி நடந்து காட்டி, தான் பிறரால் மதிக்கப்படும் செய்கையை உணர்ந்து, தான் பிறரால் சாக என்று சொல்லும்படியொழுகாது சான்றோரால் பல்லாண்டு வாழ்தல் வேண்டுமெனப் போற்றும் படி நடத்தல் மிக நல்லதாம்.*

***கொல்லாமை நன்று; கொலை தீது... 8***

*என்று சிறுபஞ்சமூலம் உணர்த்துகிறது.*

**பணத்தின் அவசியம் உணர்தல்**

*உண்பதும், உடல் அவஸ்தைகளைத் தீர்த்துக் கொள்வதும் தவிர வேறு உழைப்பு என்பதையே அறியாத சோம்பேறிப் பிண்டங்கள். மனித உணர்ச்சி அற்ற பதார்த்தங்கள்.*

பெரும்பாலோர் ஒருவேளை கூட வயிறார உண்ண முடியாமல் வாடி மெலிகிற நாட்டில், அவர்களைப் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் உண்டு கொழுத்து உல்லாசமாக வாழ்கிற இந்தச் சதைக் குன்றுகளுக்கு, யார் பாடம் கற்றுக் கொடுப்பது? (துணி.நா.ப.46) ஸ்ரீமதி பவானந்தத்தைப் பார்த்த மாதவனின் எண்ணப் பதிவு இது.

வசதி இல்லாமல் ஒருவேளை உணவு கூட கிடைக்காத நிலையில் வாழ்கின்ற மக்களை நினைத்துப் பார்க்கும்போது அவனுள்ளம் உலைக்களம் போன்று வெப்பத்தை உமிழத் தொடங்கிவிடும். இதற்குக் காரணம் பணம். நினைத்ததை எல்லாம் கைக்கு எட்டும்படி செய்யவல்ல பணத்தை, நான் எப்படியேனும் பெற்றேத்தீர வேண்டும் என்று தன்னுள்ளத்தில் பதிய வைத்தான்.

முதன்முதலாக இருநூறு ரூபாய் சம்பளம் பெற்றவன், பின்பு ஆயிரம் ஆயிரமாக வீசி எரிந்து கொண்டிருந்தான். பணம் பெருகப் பெருக தாராளத்தனம் காட்டினான். பணம் என்பது செலவு செய்யப்படுவதற்காகத்தான். சேமித்து வைப்பத்தற்காக அல்ல. (துணி. நா.ப.77) என்று கூறினான்.

ராஜா மாதிரி வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டான் மாதவன். படத் தயாரிப்பில் ஈடுபட்டு பங்களா வீடு ஒன்று கட்டினான். குதிரையேற்றம் பயின்று தேர்ச்சி பெற்றான். சாரட்டு வண்டியில் இரண்டு வெண்புரவிகள் பூட்டி வலம் வந்தான். ராஜ வாழ்க்கை வாழ்ந்தான்.

**செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்**[9]

நிறைந்த செல்வ வளம் பெற்றவர்க்குச் சிறப்பு என்பது, உறவினர்கள் வறுமையுற்ற காலத்தில் கைவிடாமல் போற்றிக் காப்பதாகும்.

## மாதவன் கண்ட அரசியல்வாதி

சிந்தனைச் சூரியன் பரப்பிரம்மம் பி.ஏ., "கலாச்சாரக் கழகம்" என்ற அமைப்பின் தலைவர். கட்சி என்றால் ஒதுக்கி விடுவார்கள் என்று எண்ணி, அமைப்பு என்று அடிக்கடி கூறிக்கொள்வார். ஆரம்பகாலத்தில் "வாரத்தாள்" ஒன்றில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தவர், பின் எழுதிப் பிழைப்பதைவிட பேசிப் பிழைப்பது வெற்றியைத் தரவும், பணம் சம்பாதிக்கவும் வழி செய்ததால் பலரைப் புகழ்ந்தும், சிலரை காக்கா பிடித்தும், முறைப்படி கம்பி இழுத்தும், தலைவர்களின் முதுகைச் சொறிந்தும், சிலருக்கு காதுகுத்தியும் தனக்கென்று தனி இடம் பிடித்தார்.

அவரது நாற்பத்து நாலாவது பிறந்தநாளை, சிறப்பாகக் கொண்டாட நினைத்தார். அப்பொழுது மாதவன் என்ற நட்சத்திரம் அவர் கவனத்திற்கு வந்தான். அதனால் விளைந்ததுதான் பட்டமளிப்பு விழா. மாதவனுக்கு "நடிக சாம்ராட் பட்டம்" வழங்க கலாச்சாரக் கழகம் முன்வந்தது. தடபுடலாக விளம்பரங்கள் செய்து, ஊர்வலம் நடத்தி, மாதவன் மேடைக்கு அழைத்து வரப்பட்டான். குமாரி சம்பாவும் உடன் வந்தாள். மாதவனின் புகழ் மேலும் ஒருபடி உயர்ந்ததால் அவனுக்கு மகிழ்ச்சி. அருமையான பப்ளிஸிட்டி. வருங்காலத்தில் நல்ல லாபம் கிடைக்கும் என்ற திருப்தி பரப்பிரமத்துக்கு (துணி.நா.ப.92). அரசியல்வாதிகளில் சிலர் பணம், புகழுக்காக நடந்து கொள்ளும் விதத்தை ஆசிரியர் அழகாக எடுத்துரைத்துள்ளார்.

சென்னையைச் சேர்ந்த சர்வதேச ஊழல் தடுப்பு மற்றும் மனித உரிமை கவுன்சில் என்ற தனியார் அமைப்பு கடந்த பிப்.26ம்தேதி சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் விருது வழங்கும் நிகழ்ச்சியை நடத்தியது. அதில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு விருதும், நடிகர் வடிவேலு உள்ளிட்ட பலருக்கு கவுரவ டாக்டர் பட்டமும் வழங்கப்பட்டது[10]

புகழ் பெற விரும்பும் சிலர் முரணான முறையில் நடந்து கொண்டு தங்கள் பெயரை பிரபலப்படுத்த விரும்புவதை அறிய முடிகிறது.

## மாதவனின் அரசியல் பங்கீடு

கலாச்சாரக் கழகத் தலைவர் ஏற்பாடு செய்த விழாக்கள், மகாநாடுகளில் மாதவன் காட்சி தந்தான். இதனால் மாதவனுக்குக்

*கூட்டம் பெருகியது. நாட்டில் தேர்தல் வர ஆரம்பித்தது.*

*நீ ஜெயிக்கமட்டாய். இந்தத் தேர்தலில் உனக்கு தோல்வி நிச்சயம் என்று பெரிய தீர்க்கதரிசி போல் கூறினார் அவர். மாதவன் அலட்சியமாகச் சிரித்தான். அது வெகுஜனங்கள் அளிக்க வேண்டிய முடிவு. வெகுஜனக்கட்சித் தலைவர் தரவேண்டிய தீர்ப்பு அல்ல (துணி.நா.ப.107) என்றான்.*

*மாதவனுக்கு இருந்த செல்வாக்கை தனக்குப் பயன்படுத்த விரும்பினார் வெகுஜனக் கட்சித்தலைவர் செல்வரங்கம். ஆனால், மாதவனை அவருக்கு எதிராக நிற்கவைத்தார் கலாச்சாரக் கழகத் தலைவர். இவற்றை எதிர்பாராத செல்வரங்கன், மாதவனை வாபஸ் பெறக்கூறியும், அவன் கேட்காமல் தீவிரமாக பிரசாரம் செய்து வெற்றி பெற்றான். வெற்றி விழா கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள சென்ற மாதவனின் உள்ளத்தில் ஆனந்தமும் பெருமையும் நிறைந்தன.*

*கொலை! யாரோ சுட்டுவிட்டார்கள்! மாதவனைக் கொன்றுவிட்டார்கள். எங்கும் பரபரப்பும் குழப்பமும் ஏற்பட்டன. எங்கோ இருந்த ஒரே ஒருவர் முகத்தில் சிரிப்பு வெடித்தது. (துணி.நா.ப.110)*

> ***மனித வாழ்க்கை என்பது தெய்வநிலையை நோக்கிச் செல்லும் புனித யாத்திரையாகும் என்கிறார் தவத்திரு சச்சிதானந்தா. அப்படிப்பட்ட புனித யாத்திரையில் நல்லவர்களாக வாழ்வோம்[11]***

*அரசியல் தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்ற நிலை, மாறிய காட்சிகள் பல அரங்கேறுகின்றன.*

> ***அறனிழுக்காது, அல்லவை நீக்கி மறனிழுக்கா***
> ***மானம் உடையது அரசு[12]***

*அறநெறியில் நின்று பாவங்களை நீக்கி, வீரம் குன்றாத உயர்வுள்ளவனே அரசன் என்று அரசியல் தலைவனுக்கு உரிய பண்புகளை வரையறை செய்கிறது குறள். ஆனால், இதையெல்லாம் தெரியாமல் பலர் அரசியல்வாதியாகி நாட்டை ஆளுவதையும், நாடும், மக்களும் இவர்களால் சீரழிவதையும் பார்க்க முடிகிறது.*

**முடிவுரை**

*சமூகம், சூழ்நிலை, காலமாற்றத்தில் எந்த மாறுதலும் ஏற்படாதபொழுது தனிமனிதன் தன் உணர்வுத்தூண்டலில் தானே மாறிக் கொள்ளவேண்டும். இந்த மாறுதல் சிலருக்கு வெற்றியையும், சிலருக்கு சிலவேளைகளில் தோல்வியையும் கற்றுக் கொடுக்கிறது. நாவல் எழுதப்பட்ட காலச்சூழ நிகழ்வுகள், ஆண்டுகள் பல கடந்த பின்பும் எந்த நல்ல மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை அறிய முடிகிறது. தனி மனித, சமூக வாழ்வு நிலையில் காணப்படுகின்ற அவலங்கள், சிக்கல்கள், காதல் உணர்வுகள், அரசியல் போக்குகள், பணம் இல்லாதவன், பணம் படைத்தவன் வாழ்க்கை முறைகள் எதுவும் மாறிடவில்லை. அப்படியே இருக்கின்றன. மேலும் தேய்வு நிலைக்கு உள்ளாகின்றன. துணிந்தவன் நாவலில் தனிமனி வீம்பானது பொருள், புகழ் தேடியும் இறுதியில் கொலை என்ற இடத்தில் நிற்கிறதை அறிய முடிகிறது. மாதவன் இப்படிப்பட்ட எல்லா சூழ்நிலையின் மத்தியில் அன்றைய பொழுதை மகிழ்வுடன் நகர்த்தும் மனநிலையைப் பெற்று வாழ்ந்தது ஏற்புடையது. ஒவ்வொரு நாள் போராட்ட வாழ்விலும் நம் மனம் அமைதி, மகிழ்வைப் பெற வேண்டும் என்பதை இந்நாவல் வழி அறிய முடிகிறது.*

**அடிக்குறிப்பு**


1. *வித்துவான்.துரை.இராசாராம், பதினெண்கீழ்க்கணக்கு (திரிகடுகம்), ப.19*
2. *கிரிஜா ஜின்னா, என்னால் முடியும், ப.73*
3. *சாமி.சிதம்பரனார், திருக்குறள் (செய்நன்றி அறிதல்), கு.எ:2*
4. *வித்துவான். துரை. இராசாராம், பதினெண்கீழ்க்கணக்கு (முதுமொழிக் காஞ்சி), பா.எ:13*
5. *நாஞ்சில் ஸ்ரீ விஷ்ணு, திட்டமிடு செயல்படு வெற்றி உறுதி, ப.113*
6. *சாமி.சிதம்பரனார், திருக்குறள் (வாய்மை), கு.எ:9*

7. வித்துவான். துரை. இராசாராம், பதினெண் கீழ்க்கணக்கு (சிறுபஞ்சமூலம்), பா.எ:2
8. வித்துவான். துரை. இராசாராம், பதினெண் கீழ்க்கணக்கு (சிறுபஞ்சமூலம்), பா.எ:51
9. டாக்டர். கதிர்முருகு, நீதிக்களஞ்சியம் (நறுந்தொகை), பா.எ:3
10. இந்து தமிழ் திசை நாளிதழ், மார்ச் 5,2023, ப.7
11. சிவசூரியன், தன்னம்பிக்கை முன்னேற்றத்தின் முதல்படி, ப.60
12. சாமி. சிதம்பரனார், திருக்குறள் (இறைமாட்சி), கு.எ:4

**துணை நூற்பட்டியல்**


1. துணிந்தவன், வல்லிகண்ணன், பாவை பப்ளிகேசன்ஸ், சென்னை, முதல் பதிப்பு - ஜூன் 2001
2. வித்துவான். துரை. இராசாராம், பதினெண்கீழ்க்கணக்கு, முல்லை நிலையம், சென்னை, முதல் பதிப்பு - 1995.
3. கிரிஜா ஜின்னா, என்னால் முடியும், சந்தோஷி பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - டிசம்பர் 2004.
4. சாமி.சிதம்பரனார், திருக்குறள்,, கண்ணப்பன் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - நவம்பர் 2002
5. நாஞ்சில் ஸ்ரீ விஷ்ணு, திட்டமிடு செயல்படு வெற்றி உறுதி, ஜோதிப்பிரியா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - டிசம்பர் 2004
6. டாக்டர்.கதிர்முருகு, நீதிக்களஞ்சியம், சீதைப் பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு - ஜூன் 2007.
7. சிவசூரியன், தன்னம்பிக்கை முன்னேற்றத்தின் முதல்படி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1998.